# கோவிட் 19 தடை காலத்தில் விவசாயிகளுக்கான ஆலோசனை

**அறுவடை, அறுவடைக்கு பிந்தைய செயல்பாடுகள், சேமிப்பு மற்றும் விற்பனையின்போது கடைபிடிக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பொதுவான முன்னெச்சரிக்கைகள்:**

வேளாண் பணிகளின்பொழுது கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தவிர்க்க விவசாயிகள் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்:

- ஆட்களைக் கொண்டு அறுவடை செய்யும்பொழுது நபருக்கு 4-5 அடி இடைவெளியில் வரிசைகளை ஒதுக்கி அறுவடை செய்ய வேண்டும்.
- வேளாண் பணிகளில் ஈடுபடுவோர் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும். அவ்வப்பொழுது சோப்பை உபயோகித்து கை கழுவ வேண்டும்.
- ஓய்வு, உணவருந்துதல், விளைபொருட்களை இடம் மாற்றுதல், சுமை ஏற்றி இறக்குதல் போன்ற நேரங்களில் நபருக்கு நபர் 3-4 அடி பாதுகாப்பான இடைவெளியை பின்பற்ற வேண்டும்.
- ஒரு இடத்தில் ஒரே நாளில் அதிக தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும். அதற்காக பல வேளாண் பணிகளை ஒரே நேரத்தில் திட்டமிடாமல் பிரித்து செய்ய வேண்டும்.
- கொரோனா நோய் தொற்று அறிகுறி உள்ள தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை தவிர்க்கவும். தீர விசாரித்தபின் முடிந்தவரை ஆரோக்கியமான தொழிலாளர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தவும்.
- சாத்தியமான இடங்களில் இயந்திரங்களை பயன்படுத்தவும். குறைந்தபட்ச நபர்களை மட்டுமே இயந்திரங்களை இயக்க அனுமதிக்க வேண்டும்.
- இயந்திரங்களை பயன்படுத்த துவங்கும் முன்பும், பணியிடையில் அவ்வப்பொழுதும் சுத்தப்படுத்த வேண்டும். அனைத்து போக்குவரத்து

வாகனங்கள், சாக்கு மற்றும் பிற சேமிப்பு உபகரணங்களையும் சுத்தப்படுத்த வேண்டும்.

- விளைபொருட்களை 3-4 அடி இடைவெளியில் சிறிய குவியல்களாக சேகரிக்க வேண்டும். கூட்டத்தைத் தவிர்க்க குவியலுக்கு 1-2 நபர்களை மட்டுமே சுத்திகரித்தல் மற்றும் பிற பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
- பண்ணையில் சேமிக்க முடியுமானால், விளைபொருட்களை உடனடியாக சந்தைக்கு எடுத்து செல்வதைத் தவிர்க்கவும்.
- வேளாண் இடுபொருட்களை வாங்கும்பொழுதும் விளைபொருட்களை சந்தையில் விற்கும்பொழுதும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றவும்.

## தமிழ்நாட்டிற்கான வழிகாட்டுதல்களும் ஆலோசனைகளும்

**வழிகாட்டுதல்கள் -** D.O. **கடித எண்** 87 / APC&PS/ 2020 **நாள்** 24/03/2020; **குடும்ப நலத்துறையின் அரசாணை எண்**. 232 / 27.03.2020 & **அரசாணை எண்**. 152/23.03.2020

1. காய்கறிகள், பழங்களை விவசாயிகள் உள்ளூர், மொத்த சந்தை மற்றும் உழவர் சந்தைகளில் விற்பனை செய்யலாம். இதற்காக, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் உதவியை விவசாயிகள் பெறலாம். கூட்டத்தைத் தவிர்ப்பது மற்றும் 3 அடி இடைவெளியில் தனிமைப்படுத்தும் தூரத்தை கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. விவசாயிகள் விளைபொருட்களை சந்தைகளுக்கு தடையின்றி கொண்டு செல்வதற்காக **D.O. கடித எண் 87 / APC&PS/ 2020 நாள் 24/03/2020**ன் நகலை எடுத்துச் செல்ல வேண்டும்.
3. விவசாய விளைபொருட்களை உள்ளூர், மொத்த சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகளில் விற்பனை செய்வதற்கு அரசாணையில் விதிக்கப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடுகள் பொருந்தாது.

4. விவசாயிகள் நலனுக்காக ஒரு உதவி வேளாண்மை அலுவலர் மூலம் தமிழ்நாடு விநியோக சங்கிலி மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ள முதல்நிலை பதன்செய் மையம் இயங்கும்.
5. விவசாயிகள் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் மற்றும் துணை வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாய இடுபொருட்களை வாங்கலாம்.
6. விவசாயிகளின் பயன்பாட்டிற்காக அரசு மற்றும் தனியார் துறைகளின் விதை சேமிப்பு, சோதனை, பதப்படுத்துதல், தரம் பிரித்தல் மற்றும் பொதியிடும் வசதிகள் இயங்கும்.
7. காரீப் 2020 பருவத்திற்கான அனைத்து பயிர் விதைகளும் தனியார் விதை நிறுவனங்களின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும். விதை நிறுவனங்கள் விவசாயிகளுக்கு அனைத்து விதைகளும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
8. விவசாயிகள் உள்ளூர் கடைகளில் உரங்களை வாங்கலாம். விவசாயிகள் வாங்கும் போது 3 அடி சமூக விலகல் தூரத்தை கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.
9. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை 180 நாட்கள் வரை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் சேமிக்கலாம். இதற்கு 30 நாட்கள் வரை வாடகை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
10. விவசாயிகள் விளைபொருட்களின் சந்தை மதிப்பில் 75% அல்லது ரூபாய் 3 லட்சம் வரை (எது குறைவானதோ) கடனாக பெறலாம். கடனை திருப்பிச்செலுத்தும் காலம் 180 நாட்கள், அதில் முதல் 30 நாட்களுக்கு 5% வட்டி மட்டுமே வசூலிக்கப்படும்.
11. அழுகும் பொருட்களை சேமிக்க விவசாயிகள் குளிர் சேமிப்பு கிடங்கு வசதிகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.
12. கால்நடைகள், கோழி, மீன், முட்டை, இறைச்சி மற்றும் கால்நடை/கோழி தீவனம் ஆகியவற்றின் போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது

**பயிர் சாகுபடிக்கான ஆலோசனைகள்**

- நெல் பால் பிடிக்கும் பருவம் முதல் முதிர்ச்சி பருவம் வரை உள்ளது. விளைந்த நெல்லை ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்ய வேண்டும். பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் அறுவடை நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றம் முன் எச்சரிக்கை ஏற்பாடுகளை உறுதி செய்யவேண்டும்.
- நிலக்கடலை மற்றும் எள் பயிர்கள் முதிர்ச்சி பருவத்திலிருந்து அறுவடை பருவம் வரை உள்ளது. நிலக்கடலையை ஆட்கள் மூலம் அறுவடை செய்தபின் இயந்திரம் கொண்டு காய்களை பிரித்தெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது தனிநபர் சுகாதார பாதுகாப்பு மற்றும் உபகரணங்களை முறையாக சுத்தம் செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.
- பயறு வகை பயிர்கள் முதிர்ச்சி பருவத்திலிருந்து அறுவடை பருவம் வரை உள்ளது. ஆட்கள் மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் மூலம் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றி அறுவடை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மக்காச்சோள பயிர் கதிர் உருவாகும் பருவத்தில் உள்ளது. இப்பயிரில் படைப்புழு தாக்கம் தென்படுவதால் அதற்குரிய பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை நடவடிக்கைகளை தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும்.
- கரும்பு பயிர் வளர்ச்சி பருவத்தில் உள்ளது. குருத்துப் பூச்சி தாக்கம் இருக்கும் பட்சத்தில் முட்டை ஒட்டுண்ணி விடுதல் அல்லது பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டும்.
- மா தற்போது காய்க்கும் பருவத்தில் உள்ளது (கோலிக்குண்டு அளவிலுருந்து எலுமிச்சை அளவு வரை). மாவில் பிஞ்சு உதிர்தல் ஒரு முக்கிய பிரச்சனையாகும். இதனை நிவர்த்திசெய்ய இலைவழி ஊட்டச்சத்து தெளிப்பு தேவைப்படுகிறது. ஊட்டச்சத்து கலவையை

கலக்கும் போது சுகாதார பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

- வாழை வளர்ச்சி பருவத்திலிருந்து குலை தள்ளும் பருவத்தில் உள்ளது. மரவள்ளி முதிர்ச்சி பருவத்தில் உள்ளது; எலுமிச்சை, முந்திரி, பப்பாளி, மஞ்சள், தர்பூசணி மற்றும் காய்கறிகள் (கத்திரி, வெண்டை மற்றும் பூசணி வகைகள்) அறுவடைக்கு தயாராகியுள்ளது. அறுவடை, பதப்படுத்துதல், சேமிப்பு, போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய ஒவ்வொரு கட்டத்திலும் சுகாதார பாதுகாப்பு முறைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும்.
- தென்னை விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகளில் சுருள் வெள்ளை ஈ முக்கியமானதாகும். வேளாண்மை பல்கலை கழகங்கள் / வேளாண் அறிவியல் மையங்களால் பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை முறைகளை பின்பற்றவும். இப் பூச்சியை கட்டுப்படுத்த இராசயன பூச்சி கொல்லிகளின் பயன்பாட்டை தவிர்க்கவேண்டும்.
- பெரும்பாலான பயிர்கள் அறுவடைப் பருவத்தை நெருங்கி வருவதால் பண்ணை நடவடிக்கைகளுக்கான தொழிலாளர் பற்றாக்குறை ஒரு முக்கியமான பிரச்சனையாக உள்ளது. வாய்ப்பு உள்ள இடங்களில் அறுவடை இயந்திரங்களை, பண்ணை இயந்திர வாடகை மையத்திலிருந்து பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது தனிநபர் சுகாதாரம் மற்றும் சமூக விலகல் போன்ற அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முறையாக பின்பற்ற வேண்டும்.